கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 03.09.2012



முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (64)

64. 'மண் சுமந்த மேனியர்' நாடகத்தின் பயனை அறுவடை செய்த புலிகள்!




இராணுவத்தினனின் ஆக்ரோசமான குரல் நிச்சயமாக சிதம்பரநாதனை வெடவெடக்க வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தமது சகாக்கள் 13 பேரை புலிகள் கொலை செய்துவிட்ட நிலையில், ஏனைய இராணுவத்தினரின் அன்றைய மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. தமது சகாக்களை இழந்த நிலையில் மிகுந்த சினத்துடன் இருக்கும் ஒர் இராணுவச் சிப்பாய் என்ன செய்வான் என்பது சிதம்பரநாதனுக்கும் நன்கு தெரியும். ஏற்கெனவே அந்த இராணுவத்தினர் வழியில் தென்பட்டவர்கள் எல்லோரையும் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதும் சிதம்பரநாதனுக்குத் தெரியும்.

மலசல கூடத்தின் கதவைத் திறந்தால் நிச்சயமாக வெடிதான். கதவைத் திறக்காவிட்டால், அந்த இராணுவ வீரன் நிச்சயமாகக் கதவை உடைத்துத் திறப்பான். அவனுக்கு உதவியாக இன்னும் பல இராணுவத்தினர் நின்று கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலைமையில் சிதம்பரநாதனின் மனைவி பத்மினி ஓடோடிச்சென்று, அந்த இராணுவ வீரனின் கால்களில் விழாக்குறையாக கெஞ்சி மன்றாடிய பின்னர், அவன் மனம் இரங்கி நீட்டிய துப்பாக்கியை திருப்பிக் கொண்டான். அவனது மனமாற்றத்தால் அன்று சிதம்பரநாதனின் உயிர் காப்பற்றப்பட்டது. இந்தச் சம்பவம் நான் நேரில் கண்டதல்ல. சிதம்பரநாதனே சொல்லித் தெரிந்துகொண்டது. (இந்தச் சம்பவத்தோடு ஒப்பிடுகையில், புலிகள் யாரையாவது சுடுவதற்குத் தமது துப்பாக்கியை நீட்டினார்கள் என்றால், அதை ஒருபோதும் திருப்பமாட்டார்கள். ஏனெனில் புலிகள் முன்வைத்த காலைப் பின்வைக்காத கொள்கை வீரர்கள் அல்லவா?)

இந்தச் சம்பவம் சிதம்பரநாதன் இடத்தில் என்னவிதமான தாக்கத்தை உண்டு பண்ணியிருக்கும் என்று என்னால் கூற இயலவில்லை. ஆனால் இந்தச் சம்பவம் நிகழ்வதற்கு முன்னரே அவர் தமிழ் தேசிய விசுவாசியாக இருந்தார் என்பதை மட்டும் நான் அறிவேன். திருநெல்வேலி தாக்குதல் சம்பவத்தின் எதிர்விளைவாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தலைநகர் கொழும்பிலும், தென்னிலங்கையிலும் வாழ்ந்த தமிழர்கள் மீது இனவன்முறையைக் கட்டவிழ்த்து விட்டதும், அதனால் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதும், அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டதும் எல்லோரும் அறிந்த சங்கதி. அதை மீண்டுமொருமுறை இங்கு விவரிப்பது எனது நோக்கமல்ல.

இந்த இனவன்செயலின் விளைவாக தமிழ் இளைஞர்களின் பல்வேறு ஆயுதப்போராட்ட இயக்கங்கள் ஆரம்பமாயின. ஆனால் புலிகள் இயக்கம் அதற்கு முன்னரே செயற்பட்டுக் கொண்டிருந்தது. எமது கட்சி தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளுக்காக அரசியல் ரீதியாகப் போராடும் நோக்குடன், 1975ல் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற வெகுஜன அமைப்பை உருவாக்கி பிரச்சார வேலைகளை முன்னெடுத்து வந்தது. நாம் எமது முன்னணியை உருவாக்கிய சில மாதங்களில் புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டது.

புலிகள் இயக்கத்தை உருவாக்கியவர்கள் முன்னர் தமிழரசுக்கட்சியின் பின்னணியில் உருவாக்கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையில் செயற்பட்டவர்களாவர். அவர்கள் மட்டுமின்றி, 1983 இன வன்செயலின் பின்னர் பல்வேறு ஆயுதப்போராட்ட இயக்கங்களை உருவாக்கிய பெரும்பாலோர் தமிழ் இளைஞர் பேரவையில் செயற்பட்டவர்களே. அதனால்தான் அவர்கள் பிற்காலத்திலும், இன்றும் எதிரும் புதிருமான அரசியல் இயக்கங்களாக இருக்கின்ற போதிலும், தமிழ் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இன்று அநேகமாக எல்லா முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் படிப்படியாகச் சங்கமமாகி வருவதற்கும் இதுதான் அடிப்படைக் காரணமாகும்.

இதில் சிதம்பரநாதன் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஒர் இயக்கத்தின் ஆதரவாளராகத் தன்னை இனம் காட்டவில்லை. ஆனால் புலிகள் இயக்கமும் வேறு பல இயக்கங்களும் செயற்படத் தொடங்கிய பின்னர், அவர் புலிகள் இயக்கத்தின் விசுவாசியாக மாறிக் கொண்டார். இயக்கங்கள் மத்தியில் முற்போக்குத் தேசியம், பிற்போக்குத் தேசியம் என இரு வகையான தேசியப் போக்குகள் குறித்து அந்தக் காலகட்டத்தில் பேசப்பட்டது. புலிகளைப் பெரும்பாலும் பிற்போக்குத் தேசியவாதிகள் என்றே எல்லோரும் அடையாளப்படுத்தினர். இது ஒரு குழப்பமான வாதமாகும்.

என்னைப் பொறுத்தவரை தேசியவாதம் என்பது ஒன்றுதான் என்று சொல்வேன். ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனம் தனது தேசிய உரிமைகளுக்காகப் போராடுவதில் தவறில்லை. அது ஜனநாயகபூர்வமானதாகும். ஆனால் அப்போராட்டம் தேசிய வெறியாகவோ அல்லது தனது இனத்துக்குள் உள்ள ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகளை மறுப்பதாகவோ இருந்தால் அது பிற்போக்கானதாகும். அதுதான் தமிழ் தேசியவாதிகளின் போராட்டத்திலும் நடந்தது. அப்போராட்டம் தோல்வியடைந்ததிற்கும், இனிமேலும் தோல்வியடைய இருப்பதற்கும் காரணம் அதுதான்.

தேசியம் என்பதே அடிப்படையில் முதலாளித்துவக் கோரிக்கைதான். அது எழும் வரலாற்றுச் சூழல், அது யாருக்கு எதிராகப் போராடுகின்றது என்பதைப் பொறுத்து சில காலகட்டங்களில் கம்யூனிஸ்ட்டுகள் அதை ஆதரிப்பது வழமை. இது வரலாறு முழுவதும் பல நாடுகளில் நடந்துள்ளது. தேசிய இனப்பிரச்சினையில் கம்யூனிஸ்ட்டுகளின் நிலைப்பாடு என்ன என்பதை மாமேதை லெனின் தனது பல கட்டுரைகளில் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். லெனினின் சீடர் ஸ்டாலின் தனது **On the Opposition** என்ற நூலில் இதுபற்றி விளக்கும் போது, ஒரு தேசிய இனப் போராட்டம் ஒடுக்கப்பட்ட இனத்தின் போராட்டமாக இருந்தாலும், அது ஏகாதிபத்தியத்துக்குச் சார்பாக இருக்குமாக இருந்தால் அதைக் கம்யூனிஸ்ட்டுகள் ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள் எனத் தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கம்யூனிஸ்ட்டுகள் நிலையும் ஏறத்தாழ அதுதான்.

சிதம்பரநாதன் புலிகளையே நேரடியாக ஆதரித்ததும் இந்த அடிப்படையில்தான் என்று நினைக்கிறேன். வால்களைப் பிடிப்பதைவிட, தலையையே பிடிப்போம் என்று அவர் கருதி இருக்கலாம். ஏனெனில் இன்று வால்கள் எல்லாம் அவர் பல வருடங்களுக்கு முன்னர் போன பாதையிலேயே போகத் தொடங்கியுள்ளன.

'மண் சுமந்த மேனியர்' நாடகத்தை சிதம்பரநாதன் முன்னின்று தயாரித்த போது, பல்கலைக்கழக கலாச்சாரக்குழுவில் அங்கம் வகித்த பல்வேறு இயக்கங்களையும் சேர்ந்தவர்கள் அதில் உற்சாகமாகப் பங்குபற்றினர். அதற்குக் காரணம்




Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

| |
|---|
| BBC |
| Newsnow |

சிங்களப் பேரினவாதம் என்ற பொது எதிரிக்கு அது எதிரானது என்ற கருத்தின் அடிப்படையால் ஆகும். புலிகளும் அதை ஆதரித்தார்கள். புலிகளைப் பொறுத்தவரை, பல்வேறு இயக்கத்தவர்கள் அதை ஆதரித்தாலும் கூட, இறுதியில் அந்த நாடகத்தின் அறுவடை தம்மைத்தான் வந்து சேரும் என்று புலிகள் உறுதியாக நம்பினர். அதுதான் உண்மையிலும் நடந்தது.

இந்த நாடகத்துக்கான கருவும் தற்செயலாக உருவாக்கப்பட்டதுதான். அந்த நாட்களில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள கலட்டி என்ற இடத்தில் சீவல் தொழில் செய்து வந்த உடையார் என்ற பெயருடைய ஒருவருடைய வீட்டுக்கு பனம் கள் அருந்துவதற்காக நாம் இடையிடையே செல்வதுண்டு. அப்படிச் செல்பவர்களில் சிதம்பரநாதன் நிச்சயம் இருப்பார். அப்படி ஒருமுறை சென்றிருந்தபோதுதான், 'மண் சுமந்த மேனியர்' நாடகத்துக்கான கரு பற்றிக் கலந்துரையாடப்பட்டது. சிதம்பரநாதன் தான் கருவின் மூலத்தை முன்வைத்தவர் என்று நினைக்கிறேன். அன்று சென்றவர்களில் சிதம்பரநாதன், சிவரஞ்சித், சர்வேந்திரா (அவர் அந்தக்காலத்தில் மது அருந்துவதில்லை), மோகன், யோகர், அ.ரவி, நான் ஆகியோர் அடங்கியிருந்தோம் என நினைக்கிறேன்.

கரு உருவானதும் நாடகத் தயாரிப்பு முயற்சிகள் தீவிரமாக நடந்தன. சிதம்பரநாதனையும் என்னையும் தவிர, நாடகக் கரு உருவாக்கத்தில் பங்குபற்றிய அனைவரும், இன்னும் பலரும் நாடகத்தில் நடித்தனர். நாடகம் வடக்கின் மூலை முடுக்கெல்லாம் அரங்கேற்றப்பட்டு மக்களின் அமோக ஆதரவைப் பெற்றது. அதற்குக் காரணம், அன்றைய சூழ்நிலையில் ஐ.தே.க அரசாங்கம் தமிழ் மக்களின் மேல் அவிழ்த்துவிட்ட கொடூரமான யுத்தம்தான். பின்னர் மண் சுமந்த மேனியர் இரண்டாம் பாகம் அரங்கேற்றப்பட்டதாயினும், அது பெருமளவுக்கு மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

மண் சுமந்த மேனியர் நாடகம் புலிகள் எதிர்பார்த்தது போல, புலிகளுக்கு நல்ல அறுவடையை ஈட்டிக்கொடுத்தது. அதைத் தொடர்ந்து அதன் நெறியாளர் என்ற வகையில் சிதம்பரநாதனை புலிகள் படகு மூலம் தமிழகத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது அங்கு தங்கியிருந்த பிரபாகரனை சிதம்பரநாதன் சந்திப்பதற்கு புலிகள் ஏற்பாடு செய்தனர். மண் சுமந்த மேனியர் நாடகத்தைத் தயாரித்து மக்கள் மத்தியில் மேடையேற்றி, தமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உரமூட்டியதிற்காக பிரபாகரன் சிதம்பரநாதனை வெகுவாகப் பாராட்டினார். இந்தச் சந்திப்பு சிதம்பரநாதனின் போக்கில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணி விட்டிருந்தது என்பதை, அவர் நாடு திரும்பிய பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின.

தொடரும்

முன்னைய பதிவுகள்